[1970 மார்ச் ?

சென்னை மத்திய சிறைச்சாலையை சென்னைக்கு வெளியே மாற்ற உத்தேசம் இருக்கிறதா? அப்படியெனில் எப்போது மாற்றப் படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, சென்னைக்கு வெளியே மத்திய சிறைச்சாலையை மாற்றுவது என்ற விஷயம் நீண்ட நாட்களாக பரிசீலனையில் இருந்து வருகிறது. இப்போதைக்கு அதன்மீது முடிவு எடுப்பதாக இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகள் மேலும் விஸ்தரிக்கப்படாவிட்டாலும், அங்கே இருக்கிற குற்றவாளிகளுக்கு சில வசதிகளையாவது செய்து கொடுக்குமா? அதாவது, குற்றவாளிகள் சாப்பிடுகின்ற நேரத் திலே வெயிலிலே நின்றுகொண்டுதான் சாப்பிடுகிறார்கள். அவர் கள் சாப்பிடுவதற்கென்று நிழலில் ஒதுங்குவதற்காக ஒரு ஷெட்டாவது கட்டித்தரலாமே. அப்படி அவர்களுக்கு இடவசதி செய்துகொடுக்கப்படுமா? முன்னே இருந்த அரசாங்கத்தில் செய்யாவிட்டாலும், நமது அரசாங்கத்திலாவது இந்த வசதியைச் செய்து தருவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, சிறைச் சாலைகளில் வசதிகள் செய்துகொடுக்க வேண்டுமென்ற கருத்தைத் தான் நம்முடைய அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு, நல்ல திட்டங்களைச் செயல்படுத்துகிறது. அதைப்பற்றிய முழு விவரங் களை தற்போது என்னிடத்தில் இல்லை. குறிப்பாக சிறைச்சாலை களில் லெட்ரின் வசதி மிகவும் குறைவு என்று இந்த மன்றத்தில் அடிக்கடி எடுத்துச் சொல்லப்பட்டது. இப்போது சிறைச்சாலை களில் ஃப்ளஷ் அவுட் லெட்ரின் வசதி செய்து தரப்பட்டு வருகிறது. அதற்காக 15 லட்சம் ரூபாய் செலவிலே பேஸ்ட் ப்ரோகிராம் திட்டத்திலே வசதிகளை ஏற்படுத்தி வருகிறோம்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, கோவையில் இருக்கிற மத்திய சிறைச்சாலையை வேறு இடத்திற்கு மாற்றி, திறந்தவெளி சிறைச்சாலையாக அமைத்து, கோவையின் இட நெருக்கடியைத் தீர்க்க அரசு உத்தேசித்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே. திறந்த வெளி சிறைச்சாலைகளை எங்கெங்கு நிறுவுவது என்று பரிசீலனை செய்து, அதற்கு உகந்த இடத்தில் நிறுவ ஏற்பாடுகள் செய்து வருகிறோம், கோவையைப் பொறுத்தவரையில் அந்த முடிவு இல்லை.

தொழிற் பேட்டைகள்

259 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரைக்கு அருகே கப்பலூரில் ஆரம்பிக்கப்பட இருக்கும் தொழிற்பேட்டைக்கு மொத்தம் எத்தனை ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது?

1970 மார்ச் 7]

(இ) தொழிற்பேட்டை எப்போதிலிருந்து உற்பத்தியைத் துவக்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) மதுரை அருகே கப்ப லூரில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சிரமைக்கப்பட்ட தொழில் மனைக்கு மொத்தம் 525.59 ஏக்கர் பட்டா நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது.

(இ) ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தின் முதல் கட்டத்தை சிரமைத்து சாலைகள் போடுதல், சாக்கடை அமைத்தல், தண்ணீர் வழங்குதல் ஆகியவற்றுக்கான சிரமைப்பு பணி தொடங்கி நடை பெற்று வருகிறது. இப்பணி இன்னும் சுமார் ஆறுமாத காலத் திற்குள் முடிவுறும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் எத்தனை ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யவேண்டியிருக் கிறது? என்ன விலைக்கு ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது? தொழில் ஆரம்பிப்பவர்களுக்கு என்ன விலைக்கு கொடுக்கப்பட்டி ருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இப்போ தைக்கு 525.59 ஏக்கர் நிலம் போதும் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. என்ன தொகைக்கு வாங்கப்பட்டது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. தொழில் ஆரம்பிப்பவர்களுக்கு ஏக்கருக்கு 14 ஆயிரம் ரூபாய் என்று தற்போதைக்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

* 260 வினா.—**திரு. ஆர். கருப்பையா:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் வட்டத்தில் ஒரு தொழிற்பேட்டை நிறுவும் திட்டம் ஏதேனும் அரசின் பரி சீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான வேலைகள் ஏதேனும் தொடங்க பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) தற்போது இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். கருப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே. திருச்சி மாவட்டத்தில் அரியலூர், உடையார்பாளையம் வட்டங்கள் மிகவும் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. இந்த வட்டங் கள் அபிவிருத்தியடைய இனிமேலாவது தொழிற்பேட்டைகளை அமைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா? அப்படியெனில் எப்போது தொழிற்பேட்டைகள் வரும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு கோட்டத்தின் (ரெவின்யூ டிவிஷன்) எல்லைக்குள் தொழிற்பேட்டை இருக்கவேண்டுமென்று கருதி, சிட்டத்தட்ட 33 இடங்களில்